**கரன்தெனிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 22 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்கள் கரன்தெனிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கு வைக்கும் போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி மன்ற ஓய்வுதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 12,098,987 ஆன பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 102,083 மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,752,020 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் உறுப்பினர் படிகளிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 138,890 ஆன மோட்டார் சைக்கில் கடன் தவணை தொகை கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை உறுப்பினர் படிகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 25,647,448 கூட்டுத்தொகையான புறநெகும செயற்திட்டத்தினால் நிறைவேற்றப்பட்ட 04 செயற்திட்டங்களின் செலவினம் மூலதமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட 07 நிர்மாண வேலைகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,846,641 இற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 7,054,732 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றின் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 831,560 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

ரூபா 200,000 கூட்டுத்தொகையான சபையின் முற்கொடுப்பனவு மீதிகளும், 2001 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 19,323,775 ஆன நிலுவை முத்திரைக் கட்டணங்களும் 2011 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 1,068,083 தொகையான நிலுவை நீதிமன்ற தண்டப்பணமும் ரூபா 25,678,630 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 12 கணக்கு மீதிகளின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் மாற்றமுராது முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அம்மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 11,768,747 ஆன பெறுமதி சேர் வரி மற்றும் 2008 ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வேண்டிய ரூபா 301,177 ஆன நிச்சயிக்கப்பட்ட வரியும் 2012 ஆம் ஆண்டிலிருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 697,224 ஆன கடன் மற்றும் வட்டித் தொகையும் ரூபா 14,970,665 தொகையான கடன் மீதிகளையும் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 206,580,767 கூட்டுத்தொகையுடைய இயந்திரங்களும் உபகரணங்களும், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும், தளபாடங்களும் பொருத்திகளும் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்களின் அணிகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும் அட்டவணைகளும், ரூபா 2,829,238 தொகையான நூலகப் புத்தகங்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கைகளும், ரூபா 1,866,051 தொகையான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும் மக்கள் வங்கியினதும் நாளதுவரையாக்கப்பட்ட கடன் பதிவேடும் மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபா 285,248 தொகையான எரிபொருள் வைப்புக்கள் தொடர்பான மீதி உறுதிப்படுத்தல் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாக பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காலாவதியான ரூபா 1,599,170 கூட்டுத்தொகையான 549 தீர்வையாகாத வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 12,722,654 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,730,520 ஆகும். முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,992,134 ஆன அதிகரிப்பு தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினத்தில் 10 சதவீத குறைவொன்று தென்பட்ட போதிலும், மீண்டுவரும் வருமானத்தில் 77 சதவீதம் அளவில் மீண்டுவரும் செலவினமாக இருந்ததால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளுக்குரிய வருமான உதவிகள், சுய வருமானமீட்டல் மற்றும் மீண்டுவரும் செலவினம் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 55,046,884 | 27,949,954 | 27,096,930 | 42,324,230 | 15,227,300 |
| 2014 | 45,478,068 | 23,473,070 | 22,004,998 | 39,747,548 | 17,742,550 |
| 2013 | 42,157,014 | 14,382,078 | 27,774,936 | 35,779,067 | 8,004,131 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளிலும் வருமான உதவிகளினதும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுய வருமானமீட்டல் வருமானங்களிலும் அதிகரிப்பொன்று தென்பட்டது.

(ii) சபையின் மீண்டுவரும் செலவினம் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்திருந்த போதிலும், அந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் செலவினத்தை குறைந்த மட்டத்தில் பேணிச் செல்வது தொடர்பிலும் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் சுயவருமானமீட்டல் வருமான அளவினை விஞ்சி ஒவ்வொரு ஆண்டிலும் மீண்டெழும் செலவினம் கருத்திற்கொள்ளக் கூடியளவில் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

(iv) வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் வருமானத்திலிருந்து எந்த வகையிலும் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு முடியாத நிலைமையொன்று காணப்பட்டது.

(v) மேற்படி (i) முதல் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் சபையினால் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிட்டால் பலவீனமான நிதி முகாமைத்துவத்தின் பேரில் சபை தொடர்ந்தியங்குவது தொடர்பாக

சிக்கலான நிலையொன்று உருவாகக்கூடுமென்பது கணக்காய்வின் கருத்தாகும்.

(இ) மீளாய்வாண்டினது உள்ளவாறான மூலதன வருமானம் ரூபா 7,056,268 ஆகவும், உள்ளபடியான மூலதனச் செலவினம் ரூபா 2,784,968 ஆக இருந்தமையால் ரூபா 4,271,300 ஆன மூலதனச் செலவினை விஞ்சிய மூலதன வருமானமாக இருந்தது. மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மூலதன வருமானம் ரூபா 6,900,000 மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 11,237,800 என மதிப்பிபட்டிருந்த போதிலும், மூலதன வருமானத்தை விஞ்சிய செலவினத்திற்காக நிதியத்தை வழங்கிய முறை தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீதவரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,242,070 நிலுவையிலிருந்தும் ரூபா 776,275 பட்டியலிடலில் இருந்தும் 16 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 2,544,970 ஆக இருந்தது.

### 2.3.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 68,467 ஆன நிலுவையுடன் வருடாந்த பட்டியலிடல் உட்பட ரூபா 73,986 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டில் ரூபா 2,876 தொகையான அதாவது 4 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,598,321 ஆன நிலுவையுடன் வருடாந்த பட்டியலிடல் உட்பட ரூபா 9,354,033 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டில் ரூபா 3,107,427 தொகையான அதாவது 33 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 வியாபார கடைத்தொகுதியை குத்தகைக்கு வழங்குதல்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஊருகஸ்மங்ஹந்திய வியாபார கடைத் தொகுதியின் 27 கடைகள் மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட 12 வலை கடைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குத்தகைக்கு வழங்குவதன் முதல் நிபந்தனையின் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிடாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகை கூட்டுத்தொகை ரூபா 278,000 ஆக இருந்தது.

(ஆ) உடன்படிக்கையின் நான்காவது நிபந்தனைக்கு இணங்காமல் 12 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2015 நவம்பர் வரையில் நவீன வியாபாரத்தொகுதியின் 14 கடைகளும் நவீனமயப்படுத்தப்பட்ட 08 வலை கடைகளும் மூடப்பட்டிருந்தன.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்காக மீளாய்வாண்டில் காசாக கிடைக்கும் அளவு பட்டியலிடலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 123,350 ஆன நிலுவைத் தொகை காணப்பட்டது.

மேற்படி 2.3.1 முதல் 2.34 வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1)(அ), 159(1) மற்றும் 152(4) ஆம் பந்திகளில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து செயற்படுத்துவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக கட்டணமும்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 19,323,775 முத்திரைக் கட்டணங்களாகவும் ரூபா 1,068,083 தொகை நீதிமன்றத் தண்டப் பணமாகவும கிடைக்க வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனித வள முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திட்டத்தில் 05 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 17 ஆக இருந்தது. வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணியினரை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் முறையற்ற விதத்தில் கடமைகள் கையளிக்கப்பட்டதால் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் வீதித் தொழிலாளர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

நிரந்தர பதவியணியினரின் சம்பளம் மற்றும் படிகள் மாத்திரம் உள்ளுராட்சி மன்ற ஆணையாளரினால் மீள் அளிப்பு செய்யப்படுவதால் சபையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவிற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 7,938,203 ஆன செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பிரதேச சபை பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபை நிதியத்திலிருந்து வீதி திருத்த வேலைகளுக்காக ரூபா 989,999 செலவில் 180 கிலோ கிராம் அளவிலான 55 தார் பீப்பாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) 2014 செப்தம்பர் 29 ஆந் திகதி சபைக்கு கிடைத்த இந்த தார் பீப்பாய்கள் தலைமை முகாமைத்துவ உதவியாளரினால் கையேற்கப்பட்டிருந்த போதிலும், களஞ்சியத்திற்கு கையேற்கப்பட்டமைக்கு அல்லது பதிவேடொன்றில் பதிவு செய்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுடன் 2015 நவம்பர் 25 ஆந் திகதி செய்யப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது ரூபா 180,000 பெறுமதியான 10 தார் பீப்பாய்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டதற்கோ அல்லது சபை வளவில் காணப்படுவதை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.4 கல்விச் சுற்றுலா

பதவியணியினருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட வெளிக்கள கல்விச் சுற்றுலாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 250,000 செலவினத்தினை மேற்கொள்வதற்கு 2014 யூலை 28 ஆந் திகதி பொதுச் சபை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி ரூபா 50,000 மற்றும் 2014 செப்தம்பர் 03 ஆந் திகதி ரூபா 200,000 என ரூபா 250,000 தொகை நலன்புரி சங்கங்கத்தின் பெயரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) வெளிக்கள கல்விச் சுற்றுலாவாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அல்லது உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அறிவுறுத்தல் அல்லது அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(iii) வெளிக்கள கல்விச் சுற்றுலாவிற்குச் செல்வதற்காக நலன்புரிச்சங்கத்திற்கு நிதி செலவு வைக்கப்பட்ட போதிலும் அச்சங்கம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தின் ஊரகஸ்மன்சந்திய வாரச்சந்தை மற்றும் அதன் சுற்றுப் புறத்தில் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு கொம்போஸ்ட் உற்பத்தி செய்வதற்காக பிளிசரு செயற்திட்டத்தின் மூலம் நிலம் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணத்திற்காகவும் சேதனப் பசளை அரிக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2008 பெப்ரவரி 05 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 29 வரையான காலப்பகுதியில் ரூபா 1,710,165 செலவிடப்பட்டிருந்தது. தற்போது சேதனப்பசளை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டில் காண்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடும் போது சபையின் ஒவ்வொரு நோக்கங்களிற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தும் போது பின்னடைந்த நிலைமையொன்று தென்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட செலவின விடயமொன்றிற்காக ரூபா 1,777,800 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், 08 செலவின விடயங்களில் ரூபா 11,139,884 சேமிப்புக்களும் ஏனைய செலவின விடயமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட வரையரையை விஞ்சி ரூபா 3,429,403 செலவினமும் 04 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 1,196,711 தொகையான வருமானமும் மேலும் 04 வருமான விடயங்களில் இலக்கிடப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 8,690,412 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.லே ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாணம்) சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையினால் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்காக நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படியுமாக ரூபா 422,848 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

உள்ளூராட்சி அமைச்சிரன் 2015 யூலை 02 ஆந் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த JCB இயந்திரம் எவ்வித பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**4.5 தீர்வு செய்யப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அதில் 16 ஐய வினாக்களுக்டன் தொடர்பாக கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 31,419,747 ஆகும்.

(ஆ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் 2.2.2 ஆம் பந்தியில் ''அ'' முதல் 2.2.2 ஆம் பந்தியில் ''ஐ'' வரையான பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை தீர்வுசெய்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வாகனக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கணக்கீடு
(உ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு